# உங்கள் மசேநி

## கூடுதல் நீக்குப்போக்கு, கூடுதல் விருப்பத்தேர்வுகள்

உங்கள் ஓய்வுக்காலத்தில் உங்களுக்கு எவ்வளவு பணம் தேவைப்படும்?

உங்களுக்குக் கூடுதல் விருப்பத்தேர்வுகளை வழங்குமாறு மத்திய சேம நிதி ஆலோசனைக் குழு பரிந்துரைக்கிறது:

**தற்போதைய நிலை**

ஒரே வயதுப் பிரிவிலுள்ள எல்லாருக்கும் ஒரே அளவிலான மசேநி குறைந்தபட்சத் தொகை

ஒரே அளவிலான மசேநி குறைந்தபட்சத் தொகை

### உங்களுக்கு எப்படிப்பட்ட தொகை வழங்கல் வேண்டும் என்று நீங்கள் முடிவுசெய்யுங்கள்:

2016ஆம் ஆண்டில் உங்களுக்கு 55 வயதாகும்போது, கீழ்க்காணும் திட்டங்களிலிருந்து நீங்கள் தேர்வுசெய்ய முடியும்:

**அடிப்படைத் தொகை (சொத்துடன்) $80,500**

உங்கள் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள, ஒவ்வொரு மாதமும் **$650** முதல் **$700*** வரையிலான தொகையை வாழ்நாள் முழுவதும் பெறுவீர்கள்.

**முழுத் தொகை (சொத்தில்லாமல்) $161,000**

உங்கள் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள, ஒவ்வொரு மாதமும் **$1,200** முதல் **$1,300*** வரையிலான தொகையை வாழ்நாள் முழுவதும் பெறுவீர்கள்.

**மேம்படுத்தப்பட்ட தொகை $241,500**

உங்கள் ஓய்வுக்காலக் கணக்கில் நீங்கள் கூடுதல் பணத்தைப் போட முடிவுசெய்தால், ஒவ்வொரு மாதமும் **$1,750** முதல் **$1,900*** வரையிலான தொகையை வாழ்நாள் முழுவதும் பெறுவீர்கள்.

*இன்றைய மசேநி லை:ப் வழக்க திட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்ற கணிப்புகளின் அடிப்படையில் அமைந்தது.

### நீங்கள் எவ்வாறு நன்மை அடைவீர்கள்?

**உங்களுக்குக் கூடுதல் விருப்பத்தேர்வுகள் உள்ளன** - உங்கள் ஓய்வுக்காலத் தேவைகளைச் சிறந்த முறையில் பூர்த்தி செய்யக்கூடிய மாதாந்திரத் தொகை வழங்கலை நீங்கள் முடிவுசெய்யலாம்.

**2015இன் வரவுசெலவுத் திட்டத்தில் மேலும் எதிர்பாருங்கள்.**

CENTRAL PROVIDENT FUND BOARD SINGAPORE

MINISTRY OF MANPOWER

www.gov.sg

# உங்கள் மசேநி

## கூடுதல் நீக்குப்போக்கு, கூடுதல் விருப்பத்தேர்வுகள்

உங்கள் ஓய்வுக்காலத்தில் உங்களுக்கு எவ்வளவு பணம் தேவைப்படும்?

உங்களுக்குக் கூடுதல் நீக்குப்போக்கை வழங்குமாறு மத்திய சேம நிதி ஆலோசனைக் குழு பரிந்துரைக்கிறது:

### தற்போதைய நிலை

55 வயது முதல் எல்லாரும் தங்கள் மசேநி கணக்குகளிலிருந்து $5,000 வரை வெளியில் எடுக்க முடியும்.

வீட்டை அடைமானம் வைப்பதன் மூலம், மசேநி குறைந்தபட்சத் தொகை மற்றும் மெடிசேவ் குறைந்தபட்சத் தொகையில் இருக்கும் பாதித் தொகை போக, மீதமுள்ள தொகையை 55 வயது முதல் வெளியில் எடுக்க முடியும்.

### உங்களுக்கு உள்ள புதிய விருப்பத்தேர்வுகள்:

**கணக்கிலிருந்து கூடுதல் பணத்தை எடுக்கவோ கணக்கில் பணம் நிரப்பவோ உங்களுக்கு நீக்குப்போக்கு இருக்கும்.**

முன்பு போலவே, **55** வயதில் பணத்தை வெளியில் எடுப்பதற்கான விருப்பத்தேர்வுகளை நீங்கள் தொடர்ந்து அனுபவிப்பீர்கள்.



\+

**வருங்காலத்தில் உங்களுக்கு 65 வயதாகும்போது*,**



உங்கள் ஓய்வுக்காலக் கணக்கிலிருந்து நீங்கள் **20% வரையிலான தொகையை** (55 வயது முதல் வெளியில் எடுக்க முடிகிற முதல் $5,000 இதில் அடங்கும்) வெளியில் எடுக்க முடியும்.

ஆனால், உங்கள் மாதாந்திரத் தொகை வழங்கல்கள் **குறைவாக இருக்கும்**.

மேம்படுத்தப்பட்ட தொகை அளவுவரை நீங்கள் **உங்கள் ஓய்வுக்காலக் கணக்கில் பணம் நிரப்ப முடியும்**. உங்கள் மாதாந்திரத் தொகை வழங்கல் **கூடுதலாக இருக்கும்**.





*2013ஆம் ஆண்டில் 55 வயதை அடைந்தவர்களுக்கு இது பொருந்தும்.

### நீங்கள் எவ்வாறு நன்மை அடைவீர்கள்?

உங்கள் ஓய்வுக்காலத் தேவைகளைச் **சிறந்த முறையில் பூர்த்தி செய்துகொள்ள உங்களுக்குக் கூடுதல் நீக்குப்போக்கு இருக்கும்**.





**2015இன் வரவுசெலவுத் திட்டத்தில் மேலும் எதிர்பாருங்கள்.**

MINISTRY OF MANPOWER

www.gov.sg

# உங்கள் மசேநி


## கூடுதல் நீக்குப்போக்கு, கூடுதல் விருப்பத்தேர்வுகள்

உங்கள் ஓய்வுக்காலத்தில் உங்களுக்கு எவ்வளவு பணம் தேவைப்படும்?

உங்களுக்குக் கூடுதல் உத்தரவாதம் வழங்குமாறு மத்திய சேம நிதி ஆலோசனைக் குழு பரிந்துரைக்கிறது:

### தற்போதைய நிலை

ஒவ்வோர் ஆண்டின் மாறுவிகிதம் வேறுபட்டிருந்ததால், உங்கள் வயதுப் பிரிவினரின் குறைந்தபட்சத் தொகையை முன்கூட்டியே நிர்ணயிப்பது கடினமாக இருந்தது.



### உங்களுக்கு உள்ள புதிய விருப்பத்தேர்வுகள்:

**உங்கள் விருப்பத்தேர்வுகளை முன்கூட்டியே தெரிந்துகொள்வீர்கள்.**

ஏனென்றால், **2020**ஆம் ஆண்டு வரையிலான ஓய்வுக்கால அடிப்படைத் தொகை முன்னரே அறிவிக்கப்படும்.

**அடிப்படைத் தொகை**

| $80,500 | $83,000 | $85,500 | $88,000 | $90,500 |
|---|---|---|---|---|
| 2016ஆம் ஆண்டில் 55 வயது | 2017ஆம் ஆண்டில் 55 வயது | 2018ஆம் ஆண்டில் 55 வயது | 2019ஆம் ஆண்டில் 55 வயது | 2020ஆம் ஆண்டில் 55 வயது |

### நீங்கள் எவ்வாறு நன்மை அடைவீர்கள்?

**உங்களுக்குக் கூடுதல் உத்தரவாதமும் நீக்குப்போக்கும் இருக்கும் -**
பிற்காலத்தில் 55 வயதை அடைபவர்கள், கூடுதல் தொகையை ஒதுக்குவதன் மூலம், வாழ்க்கைத் தர, பணவீக்க மாற்றங்களைச் சமாளிக்க அதிக தொகை வழங்கலைப் பெறமுடியும் என்ற மனநிம்மதியைப் பெறுவர்.





**2015இன் வரவுசெலவுத் திட்டத்தில் மேலும் எதிர்பாருங்கள்.**

MINISTRY OF MANPOWER

www.gov.sg